# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol: 01 | Issue: 290 | 4 Pages | 23.5.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 290 | 4 பக்கங்கள் | 23.5.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 'நாட்டின் மக்கள்தான் என் வாரிசுகள்' பிரதமர் மோடி



பாட்னா, மே. 23

பீகார் மாநிலம் மகாராஜ்கஞ்ச் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"எனக்கு வாரிசுகள் இல்லை. இந்த நாட்டின் மக்களே எனது வாரிசுகள். பீகார் மற்றும் பாரதத்தின் வளர்ச்சிக்காகவும், நாட்டு மக்களின் பிரகாசமான எதிர்காலத்திற்காகவும் நான் பாடுபடுவேன்.

எதிர்கட்சிகள் ஒன்று சேரும் போதெல்லாம் வகுப்புவாதம், சாதிவாதம் மற்றும் வாரிசு அரசியல் கலாசாரத்தை வளர்க்கிறார்கள். மக்களவை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் தேதி நெருங்கி வரும் நிலையில், வாக்காளர்கள் மீண்டும் நரேந்திர மோடியை தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதை எதிர்க்கட்சிகள் ஜீரணிக்க முடியாமல் தவிக்கின்றன.

ஏழை, எளிய மக்களுக்கு நீதி வழங்குவதற்காக பழைய தண்டனைச் சட்டத்தை மாற்றியமைத்து, "நியாய சம்ஹிதா" எனப்படும் நீதிச் சட்டத்தை பா.ஜ.க. அரசு அறிமுகப்படுத்தியது. ஏழை, எளிய மக்களின் நலன் கருதி இந்த மாற்றத்தை செய்வதற்கு முந்தைய காங்கிரஸ் அரசு ஒருபோதும் நினைத்ததில்லை. ஊழல்வாதிகள், பயங்கரவாதிகள் மற்றும் வசதி படைத்தவர்கள் தங்கள் பண பலத்தைப் பயன்படுத்தி சிறையிலிருந்து வெளியே வர முடிந்தது. அதே நேரத்தில் ஏழைகளும், சாமானியர்களும் பல ஆண்டுகளாக சிறைக்குப் பின்னால் இருக்க வேண்டியிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் பீகார் மக்கள் மீது வெறுப்புணர்வை வளர்த்து வந்தனர். பீகார்மக்களுக்குஎதிராகதி.மு.க.வினர்மற்றும்தெலுங்கானாவைச் சேர்ந்த தலைவர்கள் அவதூறான வார்த்தைகளை பயன்படுத்திய நேரத்தில் காங்கிரஸ் அமைதியாக இருந்தது. இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவாகவாக்குகளைசெலுத்தி, வாக்காளர்கள்இவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும்." இவ்வாறு மோடி தெரிவித்தார்.

## குஜராத்: பாவ்நகர் ஏரியில் குளித்த 4 சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழப்பு

காந்திநகர், மே. 23

குஜராத் மாநிலம் பாவ்நகர் பகுதியில் போர்தலாவ் என்ற செயற்கை ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியில் குளிப்பதற்காக ஒரு பெண் மற்றும் 5 சிறுமிகள்சென்றுள்ளனர். அந்தபெண்ஏரிக்கரையில்துணிகளைதுவைத்துக் கொண்டிருந்தபோது சிறுமிகள் நீரில் இறங்கி குளித்துள்ளனர்.

அப்போதுசிறுமிகள்5பேரும்நீச்சல்அடிக்கமுடியாமல்தத்தளித்துள்ளனர். இதனைக் கண்டு அங்கிருந்தவர்கள் அந்த சிறுமிகளை மீட்க முயற்சி செய்தனர். ஆனால் 12 வயதான ஒரு சிறுமியை மட்டுமே மீட்க முடிந்த நிலையில், மற்ற 4 பேரும் நீரில் மூழ்கினர்.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புப் படையினர், நீரில் மூழ்கிய 4 சிறுமிகளின் உடல்களையும் மீட்டனர். இந்த சம்பவத்தில் அர்யானாபென் தாபி(17), காஜல்(12), ராஷி(19) மற்றும் அவரது சகோதரி கோமல்(13) ஆகிய 4 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விமானம் மோதி கொத்து கொத்தாக செத்து விழுந்த பிளமிங்கோ பறவைகள்... மும்பையில் அதிர்ச்சி




மும்பை, மே. 23

மராட்டிய மாநிலம் மும்பையின் காட்கோபரில் உள்ள லட்சுமி நகர் பகுதியில் எமிரேட்ஸ் விமானம் (இகே 508) நேற்று இரவு 9.18 மணிக்கு பறவைகள் மீது மோதி சேதமடைந்தது. எனினும் அந்த விமானம் மும்பை விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறங்கியதாக மும்பை விமான நிலைய வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. விமானம் சேதமடைந்ததற்கு பிளமிங்கோ பறவைகள் விமானத்தை தாக்கியதுதான் காரணம் என்று விமானிகள் கூறியுள்ளனர்.

இதுதொடர்ந்து, விமான அதிகாரிகள் வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து வனத்துறை அதிகாரிகள் சம்பவம் நடந்த இடமான லட்சுமி நகருக்கு சென்று பார்த்ததில் அங்கு 36 பிளமிங்கோ பறவைகள் உயிரிழந்தது தெரியவந்தது.

மேலும் பல பிளமிங்கோக்கள் உயிரிழந்துள்ளனவா என்பதை கண்டறிய வனத்துறை அதிகாரிகள் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். சதுப்புநில பாதுகாப்பு பிரிவு துணை பாதுகாவலர் தீபக் காடே கூறுகையில், "விமானம் பறவைகள் மீது மோதியதை விமான நிலைய அதிகாரிகள் எங்களிடம் உறுதி செய்துள்ளனர். இந்த சம்பவம் லட்சுமி நகருக்கு (கிழக்கு காட்கோபர் வடக்கு பகுதி) அருகில் நடந்துள்ளது." என்றார்.

இது குறித்து, சுற்றுச்சூழல் ஆர்வலரான டி.ஸ்டாலின் கூறுகையில், "பறவைகள் விமானத்தில் மோதிய சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. சாதாரணமாக பறவைகள் இரவில் வானத்தில் பறப்பது மிகவும் அரிது. ஒருவேளை இந்த பறவைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமாக யாராவது இந்த பறவைகளை துரத்தி இருக்கலாம், அதனால் இவை இரவில் வானத்தில் பறந்திருக்கலாம். முன்பெல்லாம் பறவைகளின் சரணாலயத்திற்கு அருகில் எந்த மின் பாதையும் கிடையாது. ஆனால் தற்பொழுது சரணாலயம் அருகில் மின் பாதைகள் போடப்பட்டிருப்பதால் இப்பறவைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்திருக்கலாம்." என்றார். விமானம் மோதி ஏராளமான பிளமிங்கோ பறவைகள் உயிரிழந்த சம்பவம் சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடையே மிகுந்த கவலையை ஏற்படுத்தி உள்ளது.

# தங்கம் வென்ற மாரியப்பனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, மே.23

மாற்று திறனாளிகளுக்கான பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் ஜப்பான் நாட்டின் கோபே நகரில் நடைபெற்று வருகின்றன.

மே 17ம் தேதி துவங்கிய பாரா ஒலிம்பிக் போட்டிகள் மே 25ம் தேதி வரை நடைபெற உள்ளன. இதில் இந்தியா சார்பில் ஏராளமான வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். பாரா தடகள வீராங்கனை தீப்தி ஜீவன்ஜி பெண்களுக்கான 400 மீட்டர் டி20 பிரிவில் இந்தியாவுக்கான முதல் தங்க பதக்கத்தை வென்றார். இவரைத் தொடர்ந்து ஓட்டப்பந்தய வீராங்கனை பிரீத்தி பால், உயரம் தாண்டுதல் வீரர் நிஷாத் குமார் முறையே வெண்கலம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

இவர்கள் வரிசையில், ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு 1.88 மீட்டர் உயரம் தாண்டி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.






இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகள் அடிப்படையில் இந்தியா நான்கு தங்கம், நான்கு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலம் என மொத்தம் பத்து பதக்கங்களுடன் புள்ளிகள் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்நிலையில், உலக பாரா தடகளப் போட்டியில் தங்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுவுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "ஜப்பானின் கோபியில் நடைபெற்று வரும் உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் உயரம் தாண்டுதலில் டி63 போட்டியில் தங்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுக்கு வாழ்த்துகள். வருங்காலத்தில் இன்னும் பெரிய உயரங்களை எட்டுவோம்" என்று அதில் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# ரூ.4 கோடி விவகாரம்: தமிழக பா.ஜனதா பொருளாளரிடம் 2 மணி நேரம் விசாரணை

சென்னை, மே. 23

நாடாளுமன்ற தேர்தல் நேரத்தில் சென்னை தாம்பரம் ரெயில் நிலையத்தில் கட்டுக்கட்டாக ரூ.4 கோடி சிக்கியது. இந்த பணம் பா.ஜனதா நெல்லை தொகுதி வேட்பாளர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ.வுக்கு கொண்டு செல்லப்பட்டது என புகார் கூறப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இந்த பணவிவகாரம் தொடர்பாக பா.ஜனதா மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகரை விசாரணைக்கு ஆஜராக சி.பி.சி.ஐ.டி. போலீசார் சம்மன் வழங்கினர்.

அதில் சென்னையில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் இன்று ஆஜராக வேண்டும் என்று கூறியிருந்தனர். ஆனால் தான் கட்சி பணிக்காக டெல்லி செல்ல வேண்டி இருப்பதால் ஆஜராக முடியாது என்றும், வருகிற 30ந் தேதிக்கு மேல் சி.பி.சி.ஐ.டி. போலீசார் எப்போது வேண்டுமானாலும் தன்னிடம் விசாரணை நடத்தலாம் என்றும், அதற்கான தேதியை நீங்களே தெரிவிக்கலாம் என்றும் சி.பி.சி.ஐ.டி. போலீசாரிடம் அவர் கூறி இருந்தார்.

இதற்கிடையே எஸ்.ஆர். சேகர் ஆஜராகததால் அவரிடம் நேரில் விசாரணை நடத்துவதற்காக



சென்னை சி.பி.சி.ஐ.டி. போலீஸ் டி.எஸ்.பி.சசிதரன் தலைமையில் 20க்கும் மேற்பட்ட போலீசார் இன்று காலை 9 மணி அளவில் கணபதி சக்தி நகரில் உள்ள உள்ள அவரது வீட்டிற்கு சென்றனர். பின்னர் சி.பி.சி.ஐ.டி. போலீசார் எஸ்.ஆர். சேகரிடம் விசாரணை நடத்தினர். அப்போது ரெயிலில் சிக்கிய பணம் எங்கே இருந்து வந்தது. கட்சிக்கும், அந்த பணத்துக்கும் சம்பந்தம் உள்ளதா? என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை கேட்டதாக கூறப்படுகிறது. அதற்கு எஸ்.ஆர்.சேகர் மிகவும் பொறுமையாக பதில் அளித்து உள்ளார். இந்த விசாரணை சுமார் 2 மணி நேரம் நடந்தது.

பின்னர் எஸ்.ஆர்.சேகர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

ரூ.4 கோடி பிடிபட்டது தொடர்பாக விசாரிக்க சி.பி.சி.ஐ.டி. சார்பில் சம்மன் கொடுக்கப்பட்டது. கட்சி நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டியிருப்பதால் 30ந் தேதி 10 நாட்கள் அவகாசம் தேவை என சி.பி.சி.ஐ.டி.க்கு கடிதம் கொடுக்கப்பட்டது. சி.பி.சி.ஐ.டி. ஏற்றுகொண்டிருந்தனர். நான் டெல்லி செல்ல இருந்த நேரத்தில் திடீரென சி.பி.சி.ஐ.டி. போலீசார் வந்தார்கள். நோட்டீஸ் கொடுக்காமல் விசாரிக்க வந்தனர். அவர்களை வரவேற்று அவர்கள் கேட்ட கேள்விக்கு சட்ட பூர்வமாக பதில் அளித்தேன். சம்பந்தம் இல்லாத கேள்விகள் கேட்டனர். தமிழக அரசின் அழுத்தம் காரணமாக, பரபரப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக காவல் துறை ஆயுதமாக பயன்படுத்தப் பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் விசாரணை நடத்த கூடாது என்று கோர்ட்டில் வழக்கு தொடுத்து இருக்கிறோம். அதற்கான உத்தரவு விரைவில் வந்து விடும். அதற்குள் பரபரப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பா.ஜனதா கட்சி மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் போலீசார் அனுப்பப்பட்டு உள்ளனர். விசாரணையை எதிர்கொள்ள நாங்கள் தயங்கவில்லை. மடியில் கனம் இல்லை. ஆனால் அரசின் நோக்கம் துன்புறுத்துதல், பரபரப்பை ஏற்படுத்துவதுதான். சட்டத்துக்கு புறம்பாக தகவல் தெரிவிக்காமல் விசாரிக்க வருகின்றனர். தமிழக அரசின் நோக்கம் பா.ஜனதாவை களங்கப்படுத்த வேண்டும் என்பது தான்.

ரூ.4 கோடி பணத்துக்கும், எங்களுக்கும் தொடர்பு இல்லை என்பதை சொல்லிவிட்டோம். உண்மையான தகவல்களை விசாரணை அதிகாரியிடம் சொல்லிவிட்டோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ராகுல் காந்தியை புகழ்ந்து பதிவிட்ட பதிவை நீக்கினார் செல்லூர் ராஜீ



சென்னை, மே. 23

நாடாளுமன்ற தேர்தல் முடிவுக்கு பிறகு அ.தி.மு.க.வில் பல்வேறு திருப்பங்கள் ஏற்படும் என்று பரவும் தகவல் தவறானது என அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்கள் தங்கள் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார், எஸ்.பி.வேலுமணி ஆகியோர் அ.தி.மு.க.வில் எந்த குழப்பமும் இல்லை என்று கூறி வருகின்றனர். கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஆர்.பி.உதயகுமார் அளித்த பேட்டியில், இனி எப்போதும் முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை அ.தி.மு.க.வில் சேர்க்கவே மாட்டோம் என்று தெரிவித்ததும் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதற்கிடையே அ.தி.மு.க.வின் மூத்த தலைவர்களுள் ஒருவரும், முன்னாள்அமைச்சருமானசெல்லூர் ராஜூ எக்ஸ் தளத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதாவது, ராகுல்காந்தி ஒரு ஓட்டலில் சாப்பிடும் வீடியோவை வெளியிட்டுள்ளார்.

அதனுடன் 'நான் பார்த்து நெகிழ்ந்து ரசித்த இளம் தலைவர் ராகுல் காந்தி' என்றும் எழுதி இருந்தார். இந்த வீடியோவுடன் கூடிய கருத்து சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வந்தது. நேற்று ராஜீவ்காந்தியின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இந்த சமயத்தில் வெளியான செல்லூர் ராஜூவின் கருத்து, எக்ஸ் தள உறுப்பினர்களிடையேயும், அ.தி.மு.க.வினரிடையேயும்சலசலப்பை ஏற்படுத்தியது.

நாடாளுமன்ற தேர்தலின் தற்போதைய நிலையை அறிந்து காங்கிரஸ் கட்சியை அ.தி.மு.க. ஆதரிக்க தொடங்கி விட்டதோ என்று கேள்வி எழுப்பி சமூக வலைதளங்களில்பலர்கருத்துகளை தெரிவித்தனர். இதுதொடர்பாக செல்லூர் ராஜூவிடம் நிருபர்கள் கேட்டதற்கு, ராகுல்காந்தியின் எளிமையை பாராட்டும் வகையில்தான் இந்த பதிவை வெளியிட்டேன். எந்த ஒரு உள்நோக்கமும் இல்லை என்றார். அவருடைய இந்த பதிவானது, தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில், ராகுல்காந்தியை புகழ்ந்து முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ வெளியிட்ட பதிவு அரசியல் களத்தில் சர்ச்சையை எற்படுத்திய நிலையில் தனது பதிவை அவர் எக்ஸ் தளத்தில் இருந்து நீக்கியுள்ளார். அதிமுக தலைமை கொடுத்த அழுத்தத்தால் ராகுல் காந்தி குறித்த பதிவை செல்லூர் ராஜூ நீக்கியிருக்கலாம் என கருதப்படுகிறது.

# பள்ளி மாணவிகளை தவறான பாதைக்கு அழைத்துச் சென்ற மாணவியின் தாய்



சென்னை, மே. 23

சென்னை வளசரவாக்கத்தில் பிளஸ்2 படிக்கும் பள்ளி மாணவிகளை பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றத்துக்காக நதியா என்ற பெண் புரோக்கர் குடும்பத்தோடு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். அவருடன் குடும்பத்தினர் 6 பேரும் பிடிபட்ட நிலையில், மாணவிகளை வெளியில் அழைத்துச் சென்று உல்லாசமாக இருந்த கோவை வாலிபரும், சென்னையை சேர்ந்த 70 வயது முதியவரும் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெண் புரோக்கர் நதியா, பிளஸ்2 படிக்கும் தனது மகளை வைத்து மாணவிகளுக்கு வலை விரித்து பாலியல் அத்து மீறலில் ஈடுபட்டிருந்தார். மாணவிகள் விலை பேசப்பட்டு வெளி மாநிலங்களுக்கும் விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். டெல்லி, ஐதராபாத் உள்ளிட்ட வெளியிடங்களுக்கு மாணவிகளை அழைத்துச் செல்ல பெரிய மனிதர்கள் பலர் ஆசைப்பட்டு விருப்பத்தை தெரிவித்துள்ளனர். இதற்கு ரூ.25 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை பணத்தை வாங்கிக் கொண்டு தரகர்கள் அனுப்பி வைத்திருப்பதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இதைத் தொடர்ந்து பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட மாணவிகள் யார்யார்? என்பது பற்றிய விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கோவை வாலிபர் மற்றும் சென்னையை சேர்ந்த முதியவரை போன்று யார்யாரெல்லாம் சிறுமிகள் என்று தெரிந்தும் மாணவிகளிடம் அத்துமீறி நடந்து கொண்டார்கள்? என்பது பற்றியும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதன்படி பாலியல் புரோக்கர் நதியாவின் வாடிக்கையாளர்கள் யார் யார்? என்பது பற்றிய பட்டியலையும் போலீசார் சேகரித்து வருகிறார்கள். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து சென்னையில் பாலியல் தொழிலில் ஈடுபடும் புரோக்கர்கள் அனைவரையும் கூண்டோடு கைது செய்ய அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி விபசார தடுப்பு பிரிவு போலீசார் பாலியல் புரோக்கர்களை பட்டியல் எடுத்து அவர்களை முழுமையாக வேட்டையாட முடிவு செய்துள்ளனர்.

# கோவையில் என்ஐஏ அதிகாரிகள் சோதனை




கோவை, மே. 23

பெங்களூருவில் உள்ள ராமேஸ்வரம் கபே ஓட்டலில் கடந்த மார்ச் 1ந் தேதி 2 குண்டுகள் வெடித்தன. இதில் ஊழியர்கள் உள்பட 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த வழக்கினை பெங்களூரு காவல்துறையினர் விசாரித்து வந்த நிலையில் வழக்கு என்.ஐ.ஏ.வுக்கு மாற்றப்பட்டது. என்.ஐ.ஏ. அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி, குண்டு வெடிப்பு சம்பவத்தில் மூளையாக செயல்பட்ட சிவமொக்கா மாவட்டம் தீர்த்தஹள்ளியை சேர்ந்த முசபீர் உசேன் சாஜீப், அப்துல் மதீன் தாகா ஆகிய 2 பேரையும் கைது செய்தனர்.

மேலும் சென்னை, சிவமொக்கா, பெங்களூரு போன்ற நகரங்களில் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக அதிரடி சோதனையும் மேற்கொண்டனர். தொடர்ந்து என்.ஐ.ஏ. அதிகாரிகள் இந்த வழக்கு தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பெங்களூரு குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக, என்.ஐ.ஏ. அதிகாரிகள் இன்று கோவையில் உள்ள 2 டாக்டர்களின் வீடுகளில் சோதனை மேற்கொண்டனர்.

கோவை சாய்பாபா காலனி பெரிய கருப்பண்ண கவுண்டர் வீதியை சேர்ந்தவர் ஜாபர் இக்பால். இவர் தனியார் ஆஸ்பத்திரியில் டாக்டராக வேலை பார்த்து வருகிறார். இன்று காலை 6 மணிக்கு இவரது வீட்டிற்கு 2 பேர் கொண்ட என்.ஐ.ஏ. அதிகாரிகள், கர்நாடக போலீசார் காரில் வந்தனர்.

அவர்கள் வீட்டிற்குள் நுழைந்ததும் வீட்டின் நுழைவு வாயில், கதவுகள் அனைத்தையும் யாரும் உள்ளே நுழையாதவாறு அடைத்தனர். தொடர்ந்து ஜாபர் இக்பாலின் வீடு முழுவதும் ஒவ்வொரு அறையாக, அங்குலம் அங்குலமாக அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

வீட்டில் இருந்த ஜாபர் இக்பாலிடமும் விசாரித்தனர். சோதனையின்போது வீட்டில் இருந்தவர்களின் செல்போன்களை வாங்கி கொண்டனர்.

இதேபோல் அவரது வீட்டின் அருகே உள்ள அவரது உறவினரான டாக்டர் நயன் சாதிக்கின் வீட்டிலும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

காலை 6 மணிக்கு தொடங்கிய சோதனையானது 10.20 மணிக்கு முடிவடைந்தது. சோதனையின் முடிவில் 2 பேரின் செல்போன்களையும் போலீசார் பறிமுதல் செய்து கொண்டதாக கூறப்படுகிறது. செல்போனில் உள்ள தரவுகளை ஆராய்ந்து சோதனை செய்து விட்டு திரும்ப ஒப்படைப்பதாக கூறி விட்டு சென்றனர். மேலும் அவர்கள் 2 பேரையும் வருகிற 23ந் தேதி பெங்களூருவில் உள்ள என்.ஐ.ஏ. அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு கூறி விட்டு சென்றுள்ளனர்.

ஏற்கனவே என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்திய இடங்களில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இங்கு சோதனை நடந்ததாக கூறப்படுகிறது.

# 15வது ஆண்டு விழா: மல்லை தமிழ் சங்கத்துக்கு முதலமைச்சர் வாழ்த்து



சென்னை, மே. 23

மல்லை தமிழ் சங்கத்தின் 15வது ஆண்டு விழாவையொட்டி அதன் தலைவர் மல்லை சத்யாவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனுப்பி உள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

தமிழ்ச் சமூகத்தின் சிறந்த ஆளுமைகளை ஆண்டுதோறும் தேர்வு செய்து பெருந்தமிழன், பெருந்தச்சன், மாமல்லன் ஆகிய விருதுகளை வழங்கி வரும் மல்லை தமிழ்ச் சங்கத்தின் பெருந்தொண்டை உளமாரப் பாராட்டுகிறேன்.


இதுபோன்ற அமைப்புகளால்தான் தமிழின் வேரும், விழுதுகளும் வலுப்பெற்றும், வளம் பெற்றும் யாராலும் வீழ்த்த முடியாத வலிமையுடன் திகழ்கின்றன.

மொழிக்காக தங்கள் இன்னுயிரையே ஈந்த தீர மிகு இனம் நமது தமிழினம். அத்தகைய தீரமும், வீரமும் என்றென்றும் குன்றாமல் இருக்க மல்லைத் தமிழ்ச் சங்கம் போன்ற தமிழ் அமைப்புகளின் தொண்டறமும், தொடர் பணியும் என்றென்றும் தேவை.

மல்லைத் தமிழ்ச் சங்கத்தின் 15வது ஆண்டு தொடக்க விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்கும் அன்பர்களுக்கும், விழாவில், "பெருந்தமிழன் விருது" பெறும் வி.ஐ.டி. நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன், "பெருந்தச்சன்" விருது பெறும் மரபுக் கட்டிடக் கலைஞர் பா.குமரேசன், மாமல்லன் விருது பெறும் கிராண்ட் மாஸ்டர் ஷிகான் கனகராஜ் ஆகிய மூன்று பேராளுமைகளுக்கும், இந்த அமைப்பையும், விழாவையும் சிறப்புற நடத்தும் மல்லை சத்யாவுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். தமிழுக்குத் தொண்டு செய்வோர் தாழ்வதில்லை.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

# தொடரும் சாரல் மழை: சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரு அடி உயர்வு



நெல்லை, மே. 24

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் கனமழை மற்றும் மிக கனமழை பெய்வதற்கான வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகவே பரவலாக கோடை மழை பெய்து வரும் நிலையில் நேற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சாரல் மழை பெய்தது. மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

மாநகரில் சில நாட்களாக பெய்த மழையால் மேலப்பாளையம், சேவியர் காலனி விரிவாக்க பகுதியான பிரைட் காலனியில் உள்ள ராஜா நகரில் மழை நீர் தேங்கி கிடக்கிறது. அங்குள்ள 4வது தெருவில் சாக்கடை நீருடன் சேர்ந்து மழைநீர் தேங்கி கிடக்கிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் முன் அதனை அப்புறப்படுத்த கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாபநாசம், மணிமுத்தாறு அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தலா 4 மில்லிமீட்டர் மழை பதிவாகியது. பிரதான அணையான பாபநாசம் அணையின் நீர்மட்டம் இன்று 51.10 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 85.20 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 63.81 அடியாகவும் உள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் நேற்று 62.80 அடியாக இருந்த நிலையில், இன்று ஒரு அடி உயர்ந்துள்ளது.

கன்னடியன் கால்வாய் பகுதியில் அதிகபட்சமாக 9.8 மில்லி மீட்டர் மழை பெய்தது. சேரன்மகாதேவி, களக்காடு, அம்பை, ராதாபுரம் உள்ளிட்ட இடங்களிலும் விட்டுவிட்டு சாரல் மழை பெய்தது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியான நாலுமுக்கில் அதிகபட்சமாக 11 மில்லி மீட்டர், ஊத்து எஸ்டேட்டில் 10 மில்லி மீட்டரும், காக்காசியில் 7 மில்லி மீட்டரும், மாஞ்சோலையில் 5 மில்லி மீட்டரும் மழை பதிவாகி உள்ளது. இதற்கிடையே நெல்லை மாவட்டத்திற்கு மிக கனமழைக்கான சிவப்பு மழை எச்சரிக்கை விலக்கப்பட்டு ஆரஞ்சு நிற எச்சரிக்கை தற்போது விடுக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் தென்காசி நகர் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் நேற்று பகலில் வானம் மேகமூட்டமாக காட்சியளித்த நிலையில் இன்று அதிகாலை வரையிலும் பரவலாக மழை பெய்தது. அங்கு அதிக பட்சமாக 11.8 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

செங்கோட்டை, ஆய்க்குடியில் தலா 5 மில்லி மீட்டரும், அணை பகுதிகளான ராமநதி மற்றும் கடனாவில் தலா 2 மில்லி மீட்டரும், குண்டாறு அணையில் 4 மில்லிமீட்டரும் மழை பெய்தது. ஆலங்குளம், பாவூர்சத்திரம், கடையம், சங்கரன்கோவில், சிவகிரி, புளியங்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூரில் ஒரு மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. சூரன்குடி பகுதியில் 6 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

# பழைய காவலர் குடியிருப்பில் வெடித்த நாட்டு வெடிகுண்டு




செங்கல்பட்டு, மே. 23

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரியில் உள்ள பழைய காவலர் குடியிருப்பில் 2 நாட்டு வெடிகுண்டுகள் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த வெடிகுண்டு வெடித்து காவலர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

20 ஆண்டுகளாக மூடியுள்ள குடியிருப்பில் பூட்டை உடைத்து சுத்தம் செய்தபோது இந்த விபத்து ஏற்பட்டது.

குடியிருப்பில் இருந்த 4 நாட்டு வெடிகுண்டுகளில், 2 நாட்டு வெடிகுண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

படுகாயம் அடைந்த போக்குவரத்து காவலர் சரவணன் பொத்தேரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# அமோனியா கசிவு வழக்கு: பசுமை தீர்ப்பாயம் அதிரடி தீர்ப்பு




சென்னை, மே.23

சென்னை எண்ணூர் அருகே பெரிய குப்பம் பகுதியில் தனியாருக்கு சொந்தமான உரத் தொழிற்சாலை உள்ளது. இந்த உரத் தொழிற்சாலைக்கு துறைமுகத்தில் இருந்து அமோனியா திரவ வாயு கடலுக்கு அடியில் குழாய் பதிக்கப்பட்டு கொண்டு வரப்படுகிறது. அந்த அமோனியா திரவ வாயு தொழிற்சாலையில் உள்ள பெரிய கிடங்கில் சேமிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் டிச.26 ந்தேதி இரவு திடீரென இந்த குழாயில் சேதம் ஏற்பட்டு, குழாயில் தேங்கியிருந்த வாயு வெளியேறத் தொடங்கியது. இதனால் வாயு காற்றில் கலந்து பரவத் தொடங்கியது. இதனால் மக்களுக்கு வாந்தி மயக்கம், கண் எரிச்சல் போன்றவை ஏற்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தொழிற்சாலையை தற்காலிகமாக மூட உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் அமோனியா வாயு கசிந்து ஏராளமானோர் பாதிக்கப்பட்ட வழக்கில் தென் மண்டல பசுமை தீர்ப்பாயம் அதிரடி தீர்ப்பு வழங்கி உள்ளது. அதில்,

★ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளை முறையாக உர தொழிற்சாலை நிறுவனம் கடைபிடிக்க வேண்டும்.

★ சம்பந்தப்பட்ட துறைகளிடம் இருந்து என்.ஓ.சி. பெற்றபின், ஆலை மீண்டும் இயங்க அனுமதிக்கலாம்.

★ எண்ணூர் கோரமண்டல் ஆலை மீண்டும் இயங்க தமிழக அரசின் அனுமதி அவசியம்.

★ மாசு கட்டுப்பாட்டு வாரியம் குறிப்பிடும் தொகையை இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

# நகை வியாபாரியிடம் பட்டாக்கத்தி முனையில் 75 பவுன் தங்கம்7 கிலோ வெள்ளி கொள்ளை



காரைக்குடி, மே. 23

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ஐந்து விலக்கு சுந்தரம் செட்டியார் தெருவில் வசிப்பவர் சரவணன். நகை வியாபாரியான இவர் சென்னையில் இருந்து தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகளை மொத்தமாக வாங்கி வந்து காரைக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் செயல்பட்டு வரும் நகைக்கடைகள் மற்றும் பட்டறைகளுக்கு விற்பனை செய்து வருகிறார்.

வாரந்தோறும் குறிப்பிட்ட நாட்களில் காரைக்குடியில் இருந்து சிவகங்கைக்கு பேருந்தில் செல்லும் அவர் ஓரிரு நாட்கள் அங்கு தங்கியிருந்து தங்கம் மற்றும் வெள்ளியை வாங்கிக் கொண்டு வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். ஒருசில சமயங்கள் தவிர மற்ற நேரங்களில் சரவணன் தனியாகவே சென்னைக்கு சென்று வருவார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் சென்னை சென்ற சரவணன் சவுகார் பேட்டை பகுதியில் 600 கிராம் தங்க நகைகள் மற்றும் 7 கிலோ வெள்ளிக் கட்டியை வாங்கிக் கொண்டு நேற்று இரவு அரசு பேருந்தில் காரைக்குடி புறப்பட்டார். பேருந்தில் தூங்கியபோதும், நகைகளை தனது கைப்பைக்குள் பாதுகாப்பாக வைத்திருந்தார்.

இன்று அதிகாலை சரவணன் காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் வந்து இறங்கினார். பின்னர் அங்கிருந்து ஐந்து விலக்கு பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு நடந்த சென்று கொண்டிருந்தார். நேற்று பிற்பகல் முதல் அந்தபகுதியில் தொடர்ந்து விடிய, விடிய அடைமழை பெய்து கொண்டிருந்ததால் சாலையில் ஆட்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது. அப்போது சரவணனை பின் தொடர்ந்து மூன்று மோட்டார் சைக்கிள்கள் வேகமாக வந்தன. இதனை கவனித்த சரவணன் சாலையோரமாக நடந்து சென்றார். திடீரென அந்த வாகனங்களில் வந்த 6 பேரும் சரவணனை வழிமறித்து சுற்றி வளைத்தனர். ஹெல்மெட் மற்றும் முகக்கவசம் அணிந்திருந்த அவர்கள் கைகளில் பட்டாக்கத்தி வைத்திருந்தனர். இதனை சற்றும் எதிர்பாராத சரவணன் அவர்கள் பிடியில் இருந்து தப்பியோட முயன்று வேகமாக நடந்தார்.

ஆனாலும் அவர்கள் சரவணனை கீழே தள்ளியதோடு பட்டாக்கத்தியை காட்டி மிரட்டி அவரிடம் இருந்த தங்க நகைகளை மற்றும் வெள்ளிக்கட்டிகளை பறித்துக்கொண்டனர். பின்னர் அந்த 6 பேரும் எந்தவித சலனமும் இன்றி அங்கிருந்து தப்பிச்சென்றனர். நகைகளை பறிகொடுத்த சரவணன் திருடன்... திருடன்... என்று கூச்சல் போட்டும் ஆட்கள் நடமாட்டம் இல்லாததால் அவருக்கு உதவ யாரும் வரவில்லை. இதைத்தொடர்ந்து சரவணன் காரைக்குடி போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் சம்பவம் நடந்த பகுதிக்கு சரவணனுடன் விரைந்து சென்று அந்த பகுதி முழுவதும் தேடுதல் வேட்டை நடத்தினர். ஆனால் யாரும் சிக்கவில்லை. சரவணன் சென்னைக்கு நகைகள் வாங்க சென்றுவிட்டு நள்ளிரவு அல்லது அதிகாலையில் வருவதை தொடர்ந்து நோட்டமிட்ட மர்ம நபர்களே இந்த துணிகர கொள்ளையில் ஈடுபட்டிருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர்.

அதன் அடிப்படையில் விசாரணையை தொடங்கியுள்ள போலீசார் கொள்ளை கும்பலை பிடிக்க தனிப்படையும் அமைத்துள்ளனர். சம்பவம் நடந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமரா காட்சிகளை ஆய்வு செய்த காரைக்குடி துணை போலீஸ் சூப்பிரண்டு பிரகாஷ் கொள்ளையர்களை பிடிக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். காரைக்குடியில் இன்று அதிகாலை நடந்த இந்த கொள்ளை சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணையில் 7 டன் மீன்கள் செத்து மிதந்தன: ரசாயன கழிவுநீர் கலந்த தண்ணீர் காரணமா?



கிருஷ்ணகிரி, மே. 23

கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் கடந்த வாரம் பெய்த மழைநீருடன், அங்குள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட ரசாயன கழிவுநீரும் சேர்ந்து ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு கடும் துர்நாற்றத்துடன் நுரை பொங்க தண்ணீர் வந்தது.

கெலவரப்பள்ளி அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் கடந்த 15ந் தேதி கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணைக்கு வந்தது. தொழிற்சாலை கழிவுநீர் கலந்த நீரால் அணையில் ஏராளமான மீன்கள் செத்து மிதந்தன. இதனால் மீன் பிடிப்பவர்கள் கவலை அடைந்தனர்.

இந்த தண்ணீர் அணையின் ஷட்டர் பகுதி வரையில் சென்ற நிலையில் நேற்று காலை 7 டன் அளவிற்கு மீன்கள் அணையில் செத்து மிதந்தன. இதனால் கடும் துர்நாற்றம் வீசியது. இது குறித்து மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் கூறியதாவது:

கடந்தவாரம் அணைக்கு வந்த கழிவுநீர் கலந்த நீரால் மீன்கள் செத்தன. நேற்று முன்தினம் இரவிலும் டன் கணக்கில் மீன்கள் செத்து மிதந்தன. தற்போது யாருமே அணைக்கு செல்ல முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அணையில் மீதம் உள்ள மீன்களை பிடிக்க முடியாத அளவுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால் மீன் பிடி தொழிலை நம்பி உள்ள 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

இது தொடர்பாக மீன் வளத்துறை உதவி இயக்குனர் ரத்னம் கூறியதாவது:

ஆக்சிஜன் பற்றாக்குறையால் மீன்கள் இறந்திருக்கலாம். அணையில் இருந்து நீரை எடுத்து ஆய்வுக்காக அனுப்பி உள்ளோம். ஆய்வு முடிவுக்கு பிறகே மீன்கள் இறப்புக்கான காரணம் தெரியவரும். இவ்வாறு அவர் கூறினார்.

# கனமழை எதிரொலி சோத்துப்பாறை அணை நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியது



பெரியகுளம், மே. 23

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி உள்ள சோத்துப்பாறை அணையின் நீர் பிடிப்பு பகுதியில் முற்றிலும் மழை பெய்யாது போனதால் அணைக்கு நீர் வரத்து இல்லாமல் காணப்பட்டது. இந்நிலையில் கடந்த 10 நாட்களாக அணையின் நீர் பிடிப்பு பகுதியில் பெய்த கோடை மழையின் காரணமாக அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து அணையின் நீர் மட்டம் படிப்படியாக உயரத் தொடங்கிய நிலையில் நேற்று இரவு 11 மணி அளவில் அணையின் முழு கொள்ளவான 126.28 அடியை எட்டியது. இதனைத் தொடர்ந்து அணைக்கு வரும் உபரி நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதனால் பெரியகுளம், வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்களம், குள்ளப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வராகநதி ஆற்றங்கரையோர மக்களுக்கு பொதுப்பணித்துறையினர் 3ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது அணைக்கு நீர் வரத்து 49.63 கனஅடியாக உள்ள நிலையில் அணைக்கு வரும் நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

மேலும் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால் அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு அதிகரிக்கும் நிலை உள்ளது. இதனால் ஆற்றங்கரையோர பகுதி மக்கள் ஆற்றில் குளிக்கவோ கடக்கவோ வேண்டாம் என பொதுப்பணித்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கோடை மழை பெய்து சோத்துப்பாறை அணை முழு கொள்ளளவை எட்டி உபரி நீர் வெளியேறி வருவதால் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# ராமேஸ்வரம் கபே ஓட்டல் குண்டுவெடிப்பு: கோவையில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் அதிரடி சோதனை

கோவை, மே. 23

கர்நாடக மாநிலம் பெங்களூரு ஒயிட்பீல்டு அருகே குந்தலஹள்ளி பகுதியில் பிரபல ராமேஸ்வரம் கபே ஓட்டல் செயல்பட்டு வருகிறது. இந்த ஓட்டலில் கடந்த மார்ச் மாதம் 1ம் தேதி 2 குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. இந்த சம்பவத்தில் 10 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்பு பயங்கரவாத தாக்குதல் என தெரிவிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பான வழக்கு என்.ஐ.ஏ. வசம் ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து விசாரணையை தீவிரப்படுத்திய என்.ஐ.ஏ. அதிகாரிகள் குண்டுவெடிப்பில் தொடர்புடைய அப்துல் மதீன் டஹா மற்றும் முசவீர் ஹசன் ஆகிய 2 பேரை கடந்த மாதம் 12ம் தேதி மேற்குவங்காளத்தில் கைது செய்தனர். இதனை தொடர்ந்து வழக்கு விசாரணை தீவிரமாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில், பெங்களூரு ராமேஸ்வரம் கபே ஓட்டல் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக கோவையில் இன்று என்.ஐ.ஏ. அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர்.

கோவை சாய்பாபா காலனியில் தங்கியுள்ள 2 டாக்டர்களின் வீடுகளில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது. கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஜாபர் இக்பால் மற்றும் நயிம் சாதிக் ஆகிய இருவரும் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் பயிற்சி டாக்டர்களாக பணியாற்றி வருகின்றனர். அவர்கள் இருவரும் தங்கியுள்ள வீடுகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

ராமேஸ்வரம் கபே குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக கோவையில் டாக்டர்கள் வீடுகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்திய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காதல் திருமணத்தால் சீர்வரிசை கொடுமை அக்காவின் திருமணத்தன்று தங்கை மர்ம சாவு



தஞ்சாவூர், மே. 23

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே நரசிங்கம்பேட்டை கிராமத்தை சேர்ந்தவர் திவ்யராஜ். இவருக்கு 4 மகள்கள், ஒரு மகன். இவர்களில் 3வது மகள் பட்டதாரியான ஜெனிபர்(வயது 23). இவரும் இவர்களது உறவினரான மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகாவை சேர்ந்த சவுரி ராஜ் என்பவரின் மகன் மார்ட்டின்ராஜூம் காதலித்து வந்தனர்.

இதையடுத்து மார்ட்டின்ராஜ் குடும்பத்தினர், ஜெனிபரை திருமணம் செய்வதற்காக திவ்யராஜிடம் பேசியுள்ளனர். அதற்கு திவ்யராஜ் தனது 2வது மகளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அவருக்கு திருமணம் செய்யாமல் 3வது மகளுக்கு திருமணம் செய்வது நன்றாக இருக்காது என்று கூறி இந்த திருமணத்திற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

அப்போது மார்ட்டின்ராஜ், பெண்ணை மட்டும் கொடுத்தால் போதும், சீர்வரிசை எதுவும் வேண்டாம் என்று கூறியுள்ளார். இதனையடுத்து கடந்த பிப்ரவரி மாதம் 9ந்தேதி ஜெனிபரை, மார்ட்டின்ராஜ் திருமணம் செய்துள்ளார். அப்போது 2வது மகள் திருமணம் முடிந்தவுடன் சீர்வரிசை செய்வதாக ஜெனிபரின் பெற்றோர் வாக்குறுதி அளித்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து திருமணம் முடிந்து 10 நாட்களில் மார்ட்டின்ராஜ், மலேசியாவிற்கு வேலைக்கு சென்றுவிட்டார்.

இந்த நிலையில் ஜெனிபரின் அக்காவுக்கு 19 ந்தேதி திருவாரூர் மாவட்டம் குடவாசல் அருகே உள்ள ஒரு தேவாலயத்தில் திருமணம் நடந்தது. அந்த திருமணத்திற்கு ஜெனிபர், தனது மாமியார் மற்றும் நாத்தனாருடன் சென்றுள்ளார். அப்போது ஜெனிபரின் அக்காவிற்கு கொடுக்கப்பட்ட சீர்வரிசை பொருட்களை தங்களது செல்போனில் ஜெனிபரின் மாமியாரும், நாத்தனாரும் புகைப்படம் எடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து ஜெனிபரிடம், உனக்கு சீர்வரிசை எதுவும் செய்யவில்லை என்று அங்கேயே சண்டையிட்டதாகவும், உடனடியாக ஜெனிபரைவீட்டுக்கு அழைத்து சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது. அன்று இரவு தனது பெற்றோரிடம் செல்போனில் இதுகுறித்து பேசிய ஜெனிபர், அக்காவிற்கு மட்டும் இவ்வளவு சீர்வரிசை பொருட்களை உன் குடும்பத்தார் செய்துள்ளனர். உனக்கு மட்டும் ஏன் சீர்வரிசை எதுவும் செய்யவில்லை? என சொல்லி கொடுமைப்படுத்தி தன்னை தாக்கியதாக ஜெனிபர் தனது பெற்றோரிடம் கூறி உள்ளார்.

தொடர்ந்து அவர் செல்போனில் பேசிக்கொண்டிருந்தபோது ஜெனிபரின் செல்போன் தொடர்பு துண்டிக்கப்பட்டதாக தெரிகிறது. இதனால் பதற்றம் அடைந்த ஜெனிபர் குடும்பத்தினர், தங்கள் மகனை ஜெனிபர் வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். அங்கு சென்று அவர் பார்த்தபோது ஜெனிபர் மயங்கி கிடந்தது தெரிய வந்தது. இதனையடுத்து உடனடியாக அவரை மயிலாடுதுறை அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள், ஜெனிபர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த பெரம்பூர் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். இதையடுத்து ஜெனிபரின் சாவுக்கு காரணமானவர்களை கைது செய்ய வலியுறுத்தி ஜெனிபாின் பெற்றோர், போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போலீசார் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் உதவி கலெக்டர் (பொறுப்பு) அர்ச்சனா, ஜெனிபர் குடும்பத்தினரிடம் விசாரணை நடத்தினார். இதையடுத்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததன் பேரில் பிரேத பரிசோதனை செய்ய அனுமதித்தனர். இதனைத்தொடர்ந்து ஜெனிபர் குடுபத்தினர் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அக்காவின் திருமணத்தன்று தங்கை மா்மமான முறையில் இறந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் சிறுமியை சுற்றி வளைத்து கடித்த தெரு நாய்கள் வைரல் வீடியோ



சென்னை, மே. 23

சென்னை பெரம்பூர் ரமணா நகர் பகுதியை சேர்ந்தவர் அமீத் (வயது 32). இவர், பழக்கடையில் வேலை செய்து வருகிறார். இவருக்கு தாயுப் பேகம் என்ற மனைவியும், அனிஷா, தனிஷா என 2 மகள்களும் உள்ளனர். சம்பவத்தன்று மாலை தாயுப் பேகம் தனது 2 மகள்களுடன் அருகே உள்ள மசூதிக்கு சென்றுவிட்டுவீடுதிரும்பினார்.

ரமணா நகர் பழைய குடியிருப்பு பகுதி அருகே வரும்போது முன்னால் சென்றுகொண்டிருந்த அனிஷாவை, அங்கிருந்த 4 தெரு நாய்கள் விரட்டி விரட்டி கடிக்க பாய்ந்தன. இதனால் பயந்துபோன அனிஷா, அலறியபடி ஓடினாள். 4 நாய்களும் அவளை விரட்டிச்சென்று சுற்றி வளைத்து கடித்தன. அப்போது பின்னால் வந்து கொண்டிருந்த தாயுப்பேகம், இதனை கண்டு அதிர்ச்சி அடைந்தார். கீழே கிடந்த கல்லை எடுத்து நாய்கள் மீது வீசி விரட்டி அடித்தார்.

நாய்கள் கடித்ததில் அனிஷாவின் காலில் காயம் ஏற்பட்டது. அவர் சிகிச்சைக்காக பெரியார் நகர் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சிறுமியை நாய்கள் விரட்டி விரட்டி கடிக்கும் காட்சிகள் அங்குள்ள ஒரு வீட்டில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது.அந்தவீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

சென்னையில் பல்வேறு இடங்களில் வளர்ப்பு நாய்கள், தெரு நாய்கள் சிறுமிகள், பொதுமக்களை கடித்து குதறும் சம்பவங்கள் நடைபெற்று வருவது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டில் கனமழைக்கு 11 பேர் பலி



சென்னை, மே. 23

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் மார்ச் மாதம் முதல் மே மாதம் முடிய உள்ள கோடை காலத்தில் 12.5 செ.மீ. மழை இயல்பாக கிடைக்கப்பெறும். இந்த ஆண்டு மார்ச் 1ந்தேதி முதல் மே 20ந்தேதி வரை 9.63 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இது இயல்பை விட 7 சதவீதம் குறைவாகும். இன்று காலை 8.30 மணி வரை தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் சராசரியாக 1.77 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

அதிகப்படியாக நாமக்கல் மாவட்டத்தில் 7.12 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. கடலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இடி, மின்னல் தாக்கியதன் காரணமாகவும், திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதாலும் 2 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளது. அதன்படி, கடலூரில் மின்னல் தாக்கி ஒருவரும், கன்னியாகுமரியில் திடீர் வெள்ளப்பெருக்கினால் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் கனமழையின் காரணமாக கடந்த 16ந்தேதி முதல் 20 ந்தேதி வரை மொத்தம் 11 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. கனமழையின் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் 12 கால்நடை இறப்புகள் ஏற்பட்டுள்ளதோடு, 24 குடிசைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளன. நிவாரண முகாம்களில் 469 பேர் தங்க வைக்கப்பட்டனர். மேலும், கடந்த ஒரு மாத காலமாகபல்வேறுமாவட்டங்களில் வெப்பம் இயல்பை விட அதிகரித்து காணப்பட்ட நிலையில், கடந்த ஒரு வார காலமாக தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது. வரும் 24ந்தேதி வரை பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வரும் 23ந்தேதிக்குள் ஆழ்கடலில் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் கரைக்கு திரும்புமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கனமழை எச்சரிக்கையை தொடர்ந்து, பேரிடர் சூழலை திறம்பட கையாள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க மாவட்ட கலெக்டர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 437 முன்னெச்சரிக்கை அமைப்புகள் மூலம் பொதுமக்களுக்கு கடல் சீற்றம் குறித்து எச்சரிக்கை தகவல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள சுற்றுலாத் தலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும். எனவே, கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி, திண்டுக்கல், கோவை, நீலகிரி, விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 4.05 கோடி பேரின் செல்போன்களுக்கு பொதுவான எச்சரிக்கை குறுந்தகவல்கள் அனுப்பப்பட்டது.

கனமழை எச்சரிக்கையைத் தொடர்ந்து, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையை சேர்ந்த 296 வீரர்கள் அடங்கிய 10 குழுக்கள் கன்னியாகுமரி, கோவை, நெல்லை, நீலகிரி மாவட்டங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள், கூடுதல் அலுவலர்களுடன் 24 மணி நேரமும் செயல்பட்டு வருவதோடு, நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தொடரும் கனமழை 100 கமோண்டோ வீரர்களுடன் தயார் நிலையில் மீட்பு படையினர்



திருப்பூர்: மே.23

தமிழகம் முழுவதும் தற்போது பருவமழை வழக்கத்தைவிட அதிகமாக பெய்து வருகிறது. பருவமழை காரணமாக வருகின்ற 23ஆம் தேதி வரைசென்னைவானிலை ஆய்வு மையம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு ரெட் மற்றும் ஆரஞ்சு அலார்ட் விடுக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்திற்கு இன்று கனமுதல்அதிககனமழை வரைபெய்யும். 22 மற்றும் 23ஆம் தேதிகளில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாகவே நேற்று முன்தினம் 364.50 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு கிராமங்களில் குட்டைகளில் நீர் நிரம்பி பெருக்கெடுத்து ஓடியதால் கிராமங்கள் மழை நீரில் சூழ்ந்தது. விவசாய விலை நிலங்களில் தண்ணீர் புகுந்தது. தரைப்பாலம் மூழ்கியதில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. மின்னல் தாக்கியதில் மூன்று பசு மாடுகள் உயிரிழந்தது.

இந்நிலையில் வழக்கமாக ஜூன் மாதம் தொடங்கும் தென்மேற்கு பருவமழை முன்னதாக அந்தமானில் நேற்று முன்தினம் தொடங்கியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக பருவ மழையின் தொடர்ச்சியாக கனமழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழக அரசு சுகாதாரத்துறை , வருவாய்த்துறை, பேரிடர் மீட்பு மற்றும் தீயணைப்புத்துறை உள்ளிட்டவற்றைதயார்நிலையில் இருக்க உத்தரவிட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் தீயணைப்புத் துறையினர் நவீன உபகரணங்களுடன் பேரிடர் மீட்பு பணிக்காக தயார் நிலையில் உள்ளனர். கோவை மண்டல தீயணைப்பு துறை இணை ஆணையர் சரவணகுமார் உத்தரவின் பேரில், தீயணைப்புத்துறை திருப்பூர் மாவட்ட அலுவலர் அண்ணாதுரை தலைமையில், தீயணைப்பு துறை உதவி மாவட்ட அலுவலர் வீரராஜ் மற்றும் இளஞ்செழியன் உள்ளிட்டோருடன் மாவட்ட தீயணைப்புத் துறை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் மட்டுமல்ல தமிழகத்தில் எங்கு தேவைப்பட்டாலும் செல்வதற்கான தீயணைப்புத்துறை வீரர்கள் மற்றும் அலுவலர்கள் தயார் நிலையில் உள்ளனர். பேரிடர் மீட்புக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் திருப்பூர் தீயணைப்புத்துறை அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டது. வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவர்களை மீட்பது, குடியிருப்பு பகுதிகளுக்குள் வெள்ளநீர் புகுந்தால் அவர்களை பாதுகாப்பாக வெளியே கொண்டு வருவது, மரங்கள் முறிந்து விழுந்தால் அவற்றை அப்புறப்படுத்துவது, ஆழமான பகுதிக்குள் சிக்கிக் கொண்டவர்களை பத்திரமாக மீட்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்கான உபகரணங்களுடன் பேரிடர் மீட்பு பணியில் ஈடுபடுவதற்காக பயிற்சியுடன் கூடிய 100 கமோண்டோ வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

# ஒரே நாளில் 1154 மில்லி மீட்டர் மழை கொட்டி தீர்த்தது துண்டிக்கப்பட்ட சாலைகளால் மக்கள் தவிப்பு



திருச்சி, மே.23

திருச்சி மாவட்டத்தில் கடந்தசில நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வந்தது. இதனால் வெயிலின் தாக்கம் தணிந்தது. இந்த நிலையில் தமிழகத்தில் நாளை வரை கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்தது.

அதன்படி நேற்று மாவட்ட முழுவதும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது. திருச்சி மாநகர் பகுதியில் பலத்த மழை கொட்டி தீர்த்தது. மாலை 4:20 மணிக்கு தொடங்கிய மழை இரவு 10 மணி வரை நீடித்தது. இதனால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இடைவிடாமல் பெய்த மழையின் காரணமாக எடமலைப்பட்டி புதூர் அரசு காலனி, கருமண்டபம், உறையூர் உள்பட பல்வேறு இடங்களில் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது.

திருச்சி மத்திய பஸ் நிலையத்தில் மழை நீர் தேங்கியதால் பயணிகள் அவதி அடைந்தனர். அதேபோன்று மேலபுதூர் சாலையில் இடுப்பளவுக்கு தண்ணீர் தேங்கியதால் வாகனங்கள் மாற்றுபாதையில் திருப்பி விடப்பட்டன.

இதன் காரணமாக பகுதிகளில் முதலியார் சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. திருச்சி பாலக்கரை போலீஸ் நிலையம் அருகே உயர் மின்னழுத்த மின் கம்பி அருந்து விழுந்தது. பின்னர் மின்வாரிய அதிகாரிகள் அதை சரி செய்தனர்.

அதேபோன்று திருவெறும்பூர் பகுதியில் கல்லணை செல்லும் சாலையில் அரசங்குடி பகுதியில் சாலையோரம் இருந்த மரம் சாய்ந்தது.

திருச்சி மாவட்டத்தில் நேற்று ஒரேநாளில் 1154.1 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதில் அதிகபட்சமாக திருச்சி ஏர்போர்ட் பகுதியில் 129.4 மில்லி மீட்டர் மழை கொட்டி தீர்த்தது. அதேபோன்று திருச்சி ஜங்ஷன் 82.8, திருச்சி டவுன் 68 , பொன்மலை 45.2 மில்லி மீட்டர் மழை பெய்தது. புறநகர் பகுதிகளான கள்ளக்குடி 56.4, லால்குடி 81.6, நந்தியாறு அணைக்கட்டு 12.6, புள்ளம்பாடி 34.8, தேவிமங்கலம் 41.4, சமயபுரம் 120, சிறுகுடி 35.2, வாத்தலை அணைக்கட்டு 65.2, மணப்பாறை 74, பொன்னணியாறு டேம் 15.8, கோவில்பட்டி 21.4, மருங்காபுரி 15.2, முசிறி 53, புலிவலம் 20, தா.பேட்டை 44, நவலூர் கொட்டப்பட்டு 40, துவாக்குடி 52.1, கொப்பம்பட்டி 6, தென்பர நாடு 19, துறையூர் 21.

ஏர்போர்ட் பகுதியில் வரலாறு காணாத அளவிற்கு மழை கொட்டி தீர்த்தது. ஏர்போர்ட் பாரதிநகர் பகுதியில் மழை நீர் வடிகால் பகுதிகளை ஆக்கிரமித்ததால் மழைநீர்செல்ல வசதியின்றி குடியிருப்புகளை வெள்ள நீர் சூழ்ந்தது.

இதனால் தெருசாலைகள் துண்டிக்கப்பட்டதுடன், வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

திருச்சி கருமண்டபம் ஆர்.எம்.எஸ். காலனி பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் நடந்து வரும் காரணத்தினால் சாலைகள் அனைத்தும் துண்டாடப்பட்டு கிடக்கிறது.

நேற்று பெய்த மழையில் சாலையே தெரியாத அளவுக்கு காலி மனைகளில் வெள்ள நீர் புகுந்து குளம் போல் தேங்கியது. இதனால் இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் நேற்று தங்கள்வீடுகளில்முடங்கினர்.

திருச்சி மாவட்டத்தில் கோடை காலம் தொடங்கியது முதலே வெயிலின் தாக்கம் உச்சகட்டமாக இருந்தது 110 டிகிரி வரை வெயில் மக்களை சுட்டெரித்தது. வெயிலுக்கு பயந்து வீட்டில் முடங்கிய மக்கள் நேற்று மழைக்கு பயந்து வீட்டில் முடங்கும் நிலை ஏற்பட்டது.

# கோடை சுற்றுலாவை கொண்டாடும் பிரியங்கா மோகன்



கோடை சுற்றுலாவில் நேரத்தை கழித்து வரும் நடிகை பிரியங்கா மோகனின் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

தெலுங்கில் அறிமுகமாகி தமிழ் மொழியில் இன்று கொடி கட்டி பறப்பவர் நடிகை பிரியங்கா மோகன். தெலுங்கில் கேங்ஸ்டர் என்ற திரைப்படத்தின் மூலம் அவர் பிரபலமானார். நானியுடன் சேர்ந்து அவர் நடித்த அத்திரைப்படம் பெரிய ஹிட் அடித்தது. இதைத்தொடர்ந்து நெல்சன் இயக்கிய டாக்டர் திரைப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்ததன் மூலம் அவர் தமிழுக்கு அறிமுகமானார். முதல் படத்திலேயே ஒட்டுமொத்த கோலிவுட் ரசிகர்களின் மனதை கவர்ந்தார்,

இதைத் தொடர்ந்து, டான் திரைப்படத்தில் மீண்டும் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்திருந்தார். இப்படமும் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது. இதையடுத்து சன் பிக்சர்ஸ் தயாரித்த எதற்கும் துணிந்தவன் படத்தில் அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. இப்படத்தை பாண்டிராஜ் இயக்கியிருந்தார். இறுதியாக தனுஷ் நடித்த கேப்டன் மில்லர் திரைப்படத்தில் மாறுபட்ட வேடத்தில் நடித்திருந்தார்.

தற்போது கவினுடன் பெயரிடப்படாத படம், தெலுங்கில் நானியோடு 'சூர்யாவின் சனிக்கிழமை' உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில், கோடை விடுமுறைக்கு சுற்றுலா சென்றிருக்கும் பிரியங்கா மோகன் அவ்வப்போது புகைப்படங்களை பதிவிட்டு வருகிறார். அவை தற்போது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

# யோகி பாபு நடிக்கும் 'வானவன்' படப்பிடிப்பு நிறைவு




யோகி பாபு நடிப்பில் உருவாகி இருக்கும் வானவன் திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவு பெற்றதாக படக்குழு அறிவித்துள்ளது.

திரை உலகில் நகைச்சுவை நடிகராக பிரபலமான யோகி பாபு தற்போது ரஜினி, ஷாருக்கான், விஜய்சேதுபதி, சிவகார்த்திகேயன் உள்ளிட்ட ஸ்டார் நடிகர்களுடன் இணைந்து நடித்து வருகிறார். மேலும் மண்டேலா மற்றும் தர்மபிரபு உள்ளிட்ட படங்களுக்கு பிறகு கதாநாயகனாகவும் பல படங்களில் தன் நடிப்பு திறமையை வெளிக்காட்டி வருகிறார். அந்த வகையில் இவர் பூமர் அங்கிள், மிஸ்மேகி உள்ளிட்ட பல படங்களை கைவசம் வைத்துள்ளார்.

யோகி பாபு நடிக்கும் புதிய திரைப்படம் வானவன். படமானது காடுகளின் வளங்கள் அழிக்கப்படுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவாகி உள்ளது. ஈடன் பிலிக்ஸ் புரொடக்சன்ஸ் நிறுவனத்தின் சார்பில் தாமஸ் ரெனி ஜார்ஜ் தயாரிக்கிறார். இந்த படத்தை, அறிமுக இயக்குநர் சஜின் கே சுரேந்திரன் இயக்குகிறார். டத்தில் யோகி பாபுவுடன் இணைந்து ரமேஷ் திலக், லட்சுமி பிரியா, காளி வெங்கட் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

படத்திற்கு கோவிந்த் வசந்தா இசை அமைத்துள்ளார். இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வந்த நிலையில், தற்போது படப்பிடிப்பு முடிவடைந்ததாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. மேலும், படக்குழுவினர் இதை கேக் வெட்டி கொண்டாடி உள்ளனர்.

# இந்தியன் 2 படத்தில் இடம் பெற்றுள்ள "பாரா" பாடலின் புரோமோ வெளியீடு



இயக்குநர் சங்கர் மற்றும் கமல் ஹாசன் கூட்டணியில் உருவாகி இருக்கும் படம் "இந்தியன் 2" அனிருத் இசையமைக்கும் இந்த படத்தை லைகா நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தியன் 2 படத்தில் சித்தார்த், காஜல் அகர்வால், ரகுல் பிரீத் சிங், எஸ்.ஜே. சூர்யா, விவேக், நெடுமுடி வேனு, சமுத்திரக்கனி, பிரியா பவானி சங்கர், மனோபாலா, குல்ஷன் க்ரோவர், பியூஷ் மிஷ்ரா மற்றும் பலர் நடித்துள்ளனர். இந்த படம் ஜுலை 12ம் தேதி வெளியாக இருக்கிறது. இந்த படத்தின் முதல் பாடல் நாளை (மே 22) வெளியாகும் என படக்குழு ஏற்கனவே அறிவித்து இருந்தது. இந்த நிலையில், இந்தியன் 2 படத்தின் முதல் பாடல் "பாரா" நாளை மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்து இருக்கிறது. மேலும், இந்த பாடலுக்கானபுரோமோ வீடியோவையும் வெளியிட்டு உள்ளது. இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

# 'சைரன்' பட டைரக்டர் காதல் திருமணம்... நேரில் வாழ்த்திய சினிமா பிரபலங்கள்



'சைரன்' பட இயக்குநர் ஆண்டனி பாக்யராஜ் ரம்யா திருமணம் உறவினர்கள் முன்னிலையில் சென்னையில் நடைபெற்றது. அவரது திருமணத்தில் ஏகப்பட்ட சினிமா பிரபலங்கள் பங்கேற்ற புகைப்படங்கள் தற்போது வெளியாகி உள்ளன.

முதல் படத்தை இயக்கிவிட்டுத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்கிற முடிவோடு இருந்த அந்தோணி பாக்யராஜ் சைரன் படத்தை முடித்த நிலையில், தனது திருமணத்தை நடத்தி முடித்துள்ளார். திருமணம் எளிமையான முறையில் நடைபெற்ற நிலையில், மாலை நடைபெற்ற திருமண வரவேற்பு புகைப்படங்கள் தற்போது இணையத்தில் பரவி வருகின்றன.

'இரும்புத்திரை', 'விஸ்வாசம்' படங்களில் ரைட்டராக ரசிகர்களுக்கு அறிமுகமானவர் அந்தோணி பாக்யராஜ். பல படங்களில் இவர்கள் பணி புரிந்தாலும், இவருக்கான அங்கீகாரம் 'விஸ்வாசம்' படத்திற்கு பிறகே கிடைக்கத் துவங்கியது. 'சைரன்' படம் ரசிகர்களிடையே பெரியளவில் கவனம் ஈர்க்காவிட்டாலும், தயாரிப்பு தரப்பினருக்கு லாபம் கொடுத்த படமாகவும், வித்தியாசமான கதையாலும் ரசிகர்களிடையே கவனம் ஈர்த்திருந்த இயக்குநர் அந்தோனி பாக்யராஜ் தனது காதலியை இருவீட்டார் சம்மதத்துடன் கரம் பிடித்தார். அவரது திருமணத்தில் ஜெயம் ரவி, சமுத்திரகனி, சிறுத்தை சிவா உள்ளிட்ட ஏராளமான பிரபலங்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

# நகைச்சுவை நடிகர்களை குறைத்து மதிப்பிடாதீர்கள் சிவகார்த்திகேயன்



நகைச்சுவை நடிகர்களை எப்போதும் குறைத்து மதிப்பிட வேண்டாம் என கருடன் திரைப்பட டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட நடிகர் சிவகார்த்திகேயன் கேட்டுக் கொண்டுள்ளார். இயக்குனர் துரை செந்தில்குமார் இயக்கத்தில் 'கருடன்' படத்தில், சூரி நடித்துள்ளார். இந்த படத்தின் டீசர் சில மாதங்களுக்கு முன் வெளியாகி மக்களின் கவனத்தை பெற்றது. இந்த படத்திற்கு வெற்றிமாறன் கதை எழுத, சூரியுடன் இணைந்து சசிகுமார், சமுத்திரக்கனி, உன்னி முகுந்தன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும் இந்த படத்தை வெற்றிமாறன் தயாரித்துள்ளார். இந்த படமானது வருகின்ற மே 31 ம் தேதி வெளியாகவுள்ளது. இந்நிலையில் படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சென்னை சத்யம் திரையரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் இயக்குனர் வெற்றிமாறன், சூரி, சசிகுமார், சமுத்திரக்கனி உள்ளிட்ட பிரபலங்கள் பங்கேற்றுள்ளனர். இவர்களுடன் இணைந்து சிறப்பு விருந்தினர்களாக நடிகர் சிவகார்த்திகேயன் மற்றும் நடிகர் விஜய் சேதுபதி ஆகியோரும் கலந்து பங்கேற்றனர். இந்த விழாவில் பேசிய நடிகர் சிவகார்த்திகேயன், "சீமராஜா படப்பிடிப்பின் போது கிடைத்த சிறிய இடைவெளியில் சூரி அண்ணனிடம் கதையின் நாயகனாக சில கதைகளை தேர்வு செய்து நடிக்க கூறினேன். ஆனால் அவர் தயங்கினார். பிறகு சிறிது காலம் கழித்து என்னை அழித்த சூரி, இயக்குநர் வெற்றிமாறன் தன்னை முதன்மை பாத்திரத்தில் வைத்து படம் இயக்க இருப்பதாக தெரிவித்தார். அவர் கூறிவிட்டார், ஆனால் எனக்கு பதட்டமாக இருக்கிறது. அவர் இயக்கத்தில் நடிக்க சற்று தயக்கமாக இருப்பதாக தெரிவித்தார். அவருடன் முதல் படம் இருக்கட்டும், அடுத்து யார் இந்த மாதிரி படம் எடுப்பார்கள் என்று தயங்கினார். அவரிடம் கண்ணை மூடிக்கொண்டு அவர் சொல்லும் படி நடிக்க சொன்னேன்.

காமெடி கதாபாத்திரத்தில் நடிப்பவர்களால் எமோஷன், சீரியஸ் வேடங்களில் எளிதாக நடித்துவிட முடியும். காமெடி நடிகர்களை குறைத்து மதிப்பிடாதீர்கள். அதற்கு இன்னொரு உதாரணம் சூரி அண்ணன். காமெடி நடிகர்களால் சீரியஸ் கதாபாத்திரங்களில் நடித்துவிட முடியும். ஆனால், சீரியஸ் கதாபாத்திரம் நடிப்பவர்களால் காமெடி வேடங்களில் நடித்துவிட முடியாது. அது மிகவும் கடினமானது," என்று தெரிவித்தார்.

# தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன்: ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடி சாம்பியன்




தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டி பாங்காக்கில் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவின் இறுதிப்போட்டியில் இந்தியாவின் சாத்விக் சிராக் இணை, சீனாவின் சென் போயாங் லியு யி ஜோடியை எதிர்கொண்டது.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய இணை 2115 மற்றும் 2115 என்ற நேர் செட் கணக்கில் சீன ஜோடியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

# நீங்கள் ஏன் சிரிப்பதில்லை..? அஸ்வினின் கேள்விக்கு கம்பீர் அளித்த பளிச் பதில்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான கவுதம் கம்பீர், 2007 டி20 மற்றும் 2011 ஒருநாள் உலகக்கோப்பை தொடர்களில் இந்தியா சாம்பியன் பட்டம் வெல்வதில் முக்கிய பங்காற்றினார். ஓய்வுக்கு பின் ஐ.பி.எல். தொடரில் லக்னோ அணியின் ஆலோசகராக செயல்பட்டு வந்த அவர், தற்போது கொல்கத்தா நைட் ரைடர்சுக்கு ஆலோசகாராக செயல்பட்டு வருகிறார்.

அவருடைய வழிகாட்டுதலில் ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையில் அதிரடியான முடிவுகளை எடுத்து கொல்கத்தா வெற்றி நடை போட்டு வருகிறது. அவருடைய தலைமையில் வரலாற்றிலேயே முதல் முறையாக புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த கொல்கத்தா, பைனலுக்கும் முதல் அணியாக தகுதி பெற்றுள்ளது. மேலும் 2014 காலகட்டத்தில் ஓப்பனிங்கில் அசத்திய சுனில் நரைனை இந்த வருடம் மீண்டும் கவுதம் கம்பீர் ஓப்பனிங் பேட்ஸ்மேனாக களமிறக்கியுள்ளார். இது ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

அணி வெற்றி பெற்றாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி, களத்திலும் சரி எல்லா சூழ்நிலையிலும் கம்பீர் என்றுமே ஒரே ரியாக்சன்தான் கொடுப்பார். இந்நிலையில் ஏன் நீங்கள் அடிக்கடி சிரிப்பதில்லை? என்று ஒரு நிகழ்ச்சியில் அவரிடம் ரவிச்சந்திரன் அஸ்வின் கேட்டார். அதற்கு கவுதம் கம்பீர் பதிலளித்தது பின்வருமாறு:"எனக்குபுரியவில்லை.சிலசமயங்களில்சிரிக்காததால்இவர்சீரியஸானவர், எரிச்சலுடன்இருக்கக்கூடியவர், எப்போதும் இறுக்கமான முகத்துடன் இருப்பவர் என்று மக்கள் பேசுகின்றனர். இருப்பினும் அந்த மக்கள் நான் சிரிப்பதை பார்ப்பதற்காக மைதானத்திற்கு வருவதில்லை. அவர்கள் தங்களுடைய அணி வெற்றி பெறுவதைப் பார்ப்பதற்காகவே வருகின்றனர். அது மாதிரியான தொழிலில்தான் நாங்கள் இருக்கிறோம். எனவே சிரிப்பை வைத்து என்னால் உதவ முடியாது. நான் பொழுதுபோக்கில் இல்லை. நான் பாலிவுட் நடிகர் கிடையாது. நான் கார்ப்பரேட் கிடையாது. நான் கிரிக்கெட்டர். உடைமாற்றும் அறைக்கு வெற்றியாளராக திரும்புவதே என்னுடைய வேலையாகும். வெற்றி பெறும் உடைமாற்றும் அறையே மகிழ்ச்சி நிறைந்த அறையாக இருக்கும். எனக்காக போராடுவதற்கும் எனது அணியினருக்காக போராடுவதற்கும் எதிரணியை முறியடிப்பதற்கும் விளையாட்டின் விதிமுறைக்குள் முடிந்த அனைத்தையும் செய்வதற்கு எனக்கு எல்லா உரிமையும் உண்டு.

# மற்ற போட்டிகள் எதிலும் பங்கேற்காமல் ஐ.பி.எல்.ல் மட்டும் ஆடுவது கடினம் டோனி கருத்து



இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான கேப்டனாக விளங்கிய டோனி 2019ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றாலும், ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக தொடர்ந்து விளையாடி வருகிறார். 42 வயதான அவர் இந்த சீசன் தொடங்கும் முன்பு சென்னை அணியின் கேப்டன் பதவியில் இருந்து ஒதுங்கினார். இறுதி கட்டத்தில் மட்டும் பேட்டிங் செய்ய களம் இறங்கிய டோனி அதிரடியாக சிக்சர்களை விளாசியதுடன் மொத்தம் 161 ரன்கள் எடுத்தார். அவரது ஸ்டிரைக் ரேட் 220.50 ஆகும். அவர் தொடர்ந்து ஆடுவாரா? அல்லது இந்த சீசனுடன் ஓய்வு பெறுவாரா என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் டோனி யூடியூப் சேனலுக்கு அளித்த ஒரு பேட்டியில், 'கடினமான விஷயம் என்னவென்றால் ஆண்டு முழுவதும் நான் கிரிக்கெட் விளையாடுவது கிடையாது. ஆனாலும் முழு உடல் தகுதியுடன் இருக்க வேண்டியது அவசியமானதாகும். சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடி நல்ல உடல் தகுதியுடன் இருக்கும் இளம் வீரர்களுடன் போட்டியிட வேண்டி இருக்கிறது.

தொழில்முறை போட்டியில் விளையாடுவது என்பது எளிதானது கிடையாது. இங்கு வயதை பார்த்து உங்களுக்கு யாரும் சலுகை காட்டமாட்டார்கள். நீங்கள் விளையாட வேண்டும் என்றால் உங்களுடன் விளையாடும் மற்ற வீரர்களை போல் சிறந்த உடல் தகுதியுடன் இருக்க வேண்டும். எனவே உணவு பழக்கம், கொஞ்சம் பயிற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தியாக வேண்டும். நான் சமூக வலைதளத்தில் இல்லாதது நல்ல விஷயமாகும். அதனால் எனக்கு கவனச் சிதறல் குறைவு. சர்வதேச போட்டியில் இருந்து விலகியதும் எனது குடும்பத்தினருடன் கூடுதல் நேரம் செலவிட விரும்பினேன். அதே நேரத்தில் மனதளவில் சுறுசுறுப்பாக இருக்க எனக்கு பிடித்தமான விஷயங்களில் கவனம் செலுத்த நினைக்கிறேன். என்னை பொறுத்தமட்டில் விவசாய பண்ணை, மோட்டார் சைக்கிள், பழமை வாய்ந்த கார்கள் ஆகியவற்றை அதிகம் விரும்புபவன். இந்த விஷயங்கள் எனக்கு மன அழுத்தத்தை குறைக்கக்கூடியவை. எனக்கு மன அழுத்தம் ஏற்பட்டால் எனக்கு பிடித்தமான வாகனங்களில் சென்று சில மணி நேரங்களை செலவிடுவேன். அதன் பிறகு திரும்பி விடுவேன்' என்றார்.



ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்

**விளக்கம்:**

தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவர்க்கு ஒருநாள் இன்பமே; பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

# பிரீமியர் லீக் கால்பந்து தொடர்: சாம்பியன் பட்டம் வென்று வரலாறு படைத்த மான்செஸ்டர் சிட்டி



எதிஹாட் மைதானத்தில் நடந்த பிரீமியர் லீக் இறுதிப்போட்டியில் மான்செஸ்டர் சிட்டி வெஸ்ட் ஹாம் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் 31 என்ற கோல் கணக்கில் வெஸ்ட் ஹாம் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் பிரீமியர் லீக் தொடரில் தொடர்ச்சியாக 4வது முறையாக சாம்பியன் பட்டம் வென்று மான்செஸ்டர் வரலாறு படைத்தது.

மான்செஸ்டர் அணி தரப்பில் பில் போடன் 2 கோல்களும், ரோட்ரி ஒரு கோலும் அடித்து அணி வெற்றி பெற உதவினர். வெஸ்ட் ஹாம் அணி தரப்பில் முகமது குடுஸ் மட்டுமே ஒரு கோல் அடித்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.